# இல்லம் வேண்டுவோர்க்கு

# இனிய செய்தி

உங்கள் ஸ்ரீசங்கரா தொலைக்காட்சியில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பிற்பகல் 03.30மணிக்கு ஒளிபரப்பாகிவரும் விறுவிறுப்பான, நேயர்களுக்கு உபயோகமான நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சி **"ட்ரீம் ஹோம்".**

வசிப்பதற்கு மட்டுமின்றி எதிர்கால முதலீட்டுக்காகவும் பெரும்பாலான மக்கள் தற்போது நிலங்களிலும், இல்லங்களிலும் முதலீடு செய்ய தொடங்கியுள்ளனர். தங்கத்தைவிட பல மடங்கு விலை உயர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையால் இதில் பொதுமக்களின் நாட்டம் அதிகரித்துள்ளது.

நகரங்களில் வாழும் மனிதர்களுக்கு மட்டுமல்லாது கிராமங்களில் வசிக்கும் மனிதர்களுக்கும் சொந்தமாக வீடுவாங்கவேண்டுமென்றும் அதை சிறப்புடன் பராமரிக்கவேண்டும் என்றும் பொதுவான ஆசை அதிகரித்துவருகிறது. இந்த ஆசைக்கு சிறந்த வடிகாலாய் ஸ்ரீசங்கரா டிவி வழங்கும் இந்நிகழ்ச்சி விளங்குகிறது.

இதற்காகவே சங்கரா டிவி அரங்கேற்றியுள்ள இந்நிகழ்ச்சியில் ஒவ்வொருவாரமும் பல்வேறு வல்லுநர்கள் கலந்துகொண்டு நேயர்கள் எழுப்பும் கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் விடையளிக்கின்றனர். அதனால் தமக்கென்று தனி வீடு வேண்டுவோர்க்கு வரப்பிரசாதமாய் வந்துள்ள இந்த நிகழ்ச்சி நிச்சயமாய் இனிய செய்திதானே..!

# நேரலையில் வல்லுநர்கள்

உங்கள் ஸ்ரீசங்கரா டிவியில் திங்கள் முதல் சனிக்கிழமை வரை ஒவ்வொரு நாளும் பகல் 02.00மணிக்கு ஒளிபரப்பாகி வரும் வித்தியாசமான நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சி **“டயல் சங்கரா”.**

கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம், உளவியல், ஜோதிடம் உள்ளிட்ட பல துறைகளைச் சார்ந்த அறிஞர் பெருமக்கள் கலந்துகொள்ளும் இந்நிகழ்ச்சி அரை மணிநேரம் ஒளிபரப்பாகிறது.

இந்நிகழ்ச்சியில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு துறை சார்ந்த வல்லுநர்கள் கலந்துகொண்டு தொலைபேசி மூலம் தொடர்வுகொண்டு நேயர்கள் எழுப்பும் கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் விடையளிக்கின்றனர்.

நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் அறிஞர்கள் நேயர்களின் சந்தேகங்களுக்கு எளிமையான முறையிலும், எளிதில் செயல்படுத்தக் கூடிய வகையில் தரும் விளக்கங்கள் நேயர்களுக்கு மிகுந்த பயனளிப்பதாக உள்ளதால் ஏராளமானோர் தொடர்புகொண்டு பயன்பெறுகின்றனர்.

தமிழகம் மட்டுமின்றி உலகம் முழுவதிலிருந்தும் நேயர்கள் தொலைபேசி வாயிலாக இந்த நேரடி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு விளக்கங்கள் பெற்று பயனடைகின்றனர்.